புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | மார்ச் 28, 2019 | புரட்சி 18 | முழக்கம் 11 | விலை: ரூ.3.00

# மதவெறி எதிர்ப்புக் கருத்தரங்குடன் நடந்த ஃபாரூக் நினைவு நாள்

# மேடையில் புரட்சிகர சுயமரியாதைத் திருமணம்




கோவையில் அண்ணாமலை அரங்கில் மத அடிப்படைவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட பாரூக்கின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் ஃபாரூக் மதவெறியர்களால் படுகொலை செய்யப்பட்டார். இதைக் கண்டித்து மனிதநேய அமைப்புகள் மற்றும் திராவிட அமைப்புகள் பல்வேறு போராட்டங்களையும், எதிர்ப்புகளையும் தெரிவித்தனர். ஃபாரூக் படுகொலையைக் கண்டித்து ஆண்டுதோறும் நினைவேந்தல் கூட்டங்கள் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்று வருகிறது.

நிகழ்வின் தொடக்கத்தில் இணையதள பொறுப்பாளர் விஜய்குமார் சமூக ஊடகங்களில் மதவெறி பற்றியும், கழகப் பகுத்தறிவு பரப்புரைக்கு சமூக ஊடகங்களின் தாக்கம் மற்றும் டுவிட்டர் பயன்பாடு பற்றியும் பயிற்சி அளித்தார்.

இந்தக் கூட்டத்தில் ‘மதங்களை மறப்போம், மனிதத்தை விதைப்போம்’ என தலைவர்கள் பேசினர். அதேபோல, மதங்களால் நடைபெறும் படுகொலைகள் தடுக்கப்படவேண்டும், மத அடிப்படைவாதங்கள் மாற வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் பேசப்பட்டது. திருப்பூர் முகில்ராசு, பொள்ளாச்சி வெள்ளியங்கிரி, மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் ஆகியோர் தொடக்கவுரை ஆற்றினர்.

சிறப்பு விருந்தினர்களாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத் துணைத் தலைவர் சுந்தரவள்ளி, எழுத்தாளர் பீர் முஹம்மது, எழுத்தாளர் பாமரன் மற்றும் நிகழ்ச்சி பொறுப்பாளர் நேரு தாஸ் உள்ளிட்ட பலரும் உரையாற்றினர்.

எழுத்தாளர் பீர் முஹம்மது “இஸ்லாம் அறிவியல் மதமா?” என்ற தலைப்பில்அறிவியலுக்கு எதிரான இஸ்லாம் மதக் கோட்பாடுகளை குரான் வசனங்களை மேற்கோள்காட்டிப் பேசினார்.

தொடர்ந்து எழுத்தாளர் பாமரன் தனது உரையில் அனைத்து மதங்களும் மனித சமுதாய நாகரீக வாழ்வில் வன்முறையை மட்டுமே தருகிறது என்றும் மக்களின் அமைதி வாழ்விற்கு மதமற்ற வாழ்வே சிறந்தது என்பதையும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து கழகத் தோழர்கள் அனைவரும் தங்களது இறப்பில் எந்த மத மூடச் சடங்குகளும் நடத்தக் கூடாது என்ற மரண சாசனத்தை எழுதி அறிவித்தனர். மேடையில் முகம்மது அலி ஜின்னா தன்னுடைய மரண சாசனத்தை அறிவித்தார்.

கருத்தரங்க மேடையிலேயே சுயமரியாதை திருமணம் நடந்தது. இராவண கோபால் - கோமதி ஆகியோரின் வாழ்க்கை இணையேற்பு விழாவை கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். இணையர்கள் வாழ்க்கை இணையேற்பு உறுதிமொழி எடுத்து மாலை மாற்றிக் கொண்டனர். தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் மணமக்களுக்கு பெரியார் படம் பரிசளிக்கப்பட்டது.

தொடர்ந்து பேராசிரியர் சுந்தரவள்ளி, “ஆர்.எஸ்.எஸ்.சின் தேசப்பக்தி மக்களுக்கானதா” என்ற தலைப்பில் உரையாற்றினார். பாசிசத்தின் பத்து கொள்கைகளை எடுத்துக்கூறி அதை ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திற்கு எப்படியெல்லாம் பொருந்துகிறது என்பதை விளக்கினார்

இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி “ஏன் நாம் இவர்களைத் தோற்கடிக்க வேண்டும்?” என்று நிறைவுரையாற்றினார். தன்னுடைய நீண்ட உரையில் தந்தை பெரியார் யாருக்கு இஸ்லாம் மதத்தை பரிந்துரைத்தார் என்றும் அது சுயமரியாதைகாரர்களுக்கு, கடவுள் மறுப்பாளர்களுக்கு, பெண்ணுரிமை போராளிகளுக்கு அல்ல என்றும் தெளிவுபடுத்தினார். மதப்பற்றை விட்டுவிடாமல் மத நம்பிக்கைகளோடு வாழ விரும்பும் மக்களுக்குத்தான் இன இழிவு நீங்க இஸ்லாம் இனிய மருந்து என்று பரிந்துரைத்தார் என்றும் ஃபாரூக் படுகொலைக்குப் பின் கழகத்தின் கொள்கையில் அனைத்து மதங்

3ஆம் பக்கம்

## தி.மு.க. கூட்டணியை ஆதரிக்க தமிழக மக்களுக்கு கழகம் வேண்டுகோள்



கழகப் பொருளாளர் துரைசாமி இல்லத்தில் திருப்பூரில் 20.3.2019 அன்று திராவிடர் விடுதலைக் கழக தலைமைக் குழு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் கூடியது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் களம் - தமிழ்நாட்டுக்கு மிகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. கடந்த அய்ந்து ஆண்டுகால பாஜக நடுவண் ஆட்சியில் தமிழகம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் தனித்துவத்தோடு நாம் கட்டி எழுப்பிய உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்து தமிழ்நாட்டின் மீது போர் தொடுத்தது பாஜக ஆட்சி.

   கல்வி உரிமைகள் பறிப்பு, நீட் திணிப்பு, இந்தித் திணிப்பு, சமஸ்கிருதத் திணிப்பு, காவிரி நீர் உரிமையில் வஞ்சகம், மத்திய அரசு பணிகளில் வடநாட்டவர் திணிப்பு, மதவெறி திணிப்பு, ஏழு தமிழர் விடுதலைக்கு மறுப்பு என்று தமிழகத்தை வஞ்சித்து வந்த பாஜக ஆட்சியை எதிர்த்து திராவிடர் விடுதலைக் கழகமும், தேர்தல் அரசியலில் ஈடுபடாத இயக்கங்களும், அமைப்புகளும் தொடர்ந்து போராடி வந்தோம், அரசின் அடக்குமுறைகளை சந்தித்தோம்

   நடுவண் ஆட்சி தமிழக மக்களின் உணர்வுகளை மதிக்கவில்லை. கழகங்கள் இல்லாத தமிழகத்தை உருவாக்குவோம் என்று சூளுரைத்து செயல்பட்ட பாஜக அது கற்பனைக் கனவு என்பதை புரிந்துகொண்டது. மக்கள் ஆதரவோடு ஆட்சிக்கு வந்த அஇஅதிமுக வலிமையான தலைமையை இழந்துவிட்ட சூழலை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பாஜக ஆட்சி ஆளும்கட்சியை மிரட்டியது; கட்சியை உடைத்தது; பிறகு மீண்டும் இணைத்தது. தங்களின் அதிகார வலைக்குள் சிக்கவைத்து பொம்மலாட்டம் நடத்தியது.

   மிரட்டலுக்கு அடிபணிந்து ஆளும்கட்சியும் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜகவோடு கூட்டணி அமைத்துக் கொண்டு தேர்தல் களத்திற்கு வந்திருக்கிறார்கள்.

   இந்த நிலையில் பாஜக ஆட்சியையும் அதன் அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து கைகோர்த்து நிற்கும் அஇஅதிமுகவையும் தோற்கடிக்க வேண்டும் என்பதே தமிழர்களின் ஒற்றை முழக்கமாக மாறி நிற்கிறது

   இந்த சூழலில் பாஜக ஆட்சியைத் தோற்கடித்து தமிழர்களின் தன்னுரிமையையும் தன்மானத்தையும் நிலைநாட்ட திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மகத்தான வெற்றியடையச் செய்ய வேண்டும் என்று எப்போதும் மக்களின் உரிமைகளுக்காகவே களத்தில் நிற்கும் திராவிடர் விடுதலைக் கழகம் தமிழக மக்களை உரிமையோடும் உணர்வோடும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

2. எதிர்காலத்தில் மாநிலங்களின் தன்னுரிமை தன்னாட்சியைக் காக்கும் கூட்டாட்சிக் கொள்கையை ஏற்கும் ஆட்சியே இந்தியாவில் உருவாக வேண்டும். அந்த திசையை நோக்கி அரசியலை முன்னகர்த்த வேண்டிய சூழல் எழுந்துள்ளது. இந்தியாவில் எல்லா மாநிலங்களுக்கும் எப்போதும் முன்னோடியாக திகழும் தமிழ்நாடே இதற்கும் வழிகாட்ட வேண்டும். தமிழக கட்சிகளும் இயக்கங்களும் அதற்கான செயல்பாடுகளைத் தொடங்க வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் அறைகூவி அழைக்கிறது.

3. பாஜக ஆட்சி மண்ணின் மைந்தர்களான இஸ்லாமியர்களை ஏதோ அன்னிய தேசத்தவர்கள் போலவும் தேச விரோதிகளாகவும் சித்தரித்து அவர்களின் நியாயமான உரிமைகளை மறுத்து இரண்டாம் தர குடிமக்களாக்கியது; பாரதீய ஜனதாவின் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவர வேண்டிய கடமை இஸ்லாமிய சமூகத்திற்கு உள்ளது. தமிழ்நாட்டில் பாஜகவை தோற்கடிக்கக் கூடிய வலிமையான கூட்டணி திமுக அணியாகவே இருப்பதால் இஸ்லாமிய சகோதரர்கள் இயக்க நலனை முன்னிறுத்தாமல் சமூக நலன் கருதி திமுக அணியை ஆதரிக்க வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

வேறு கட்சிகளுக்கு அளிக்கும் வாக்கு மறைமுகமாக பாஜகவிற்கே பயனளிக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# தலைமைக் கழக அலுவலகத்தைத் தக்க வைத்துக் கொள்ள கட்டமைப்பு நிதி

## கழகத் தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்

திராவிடர் விடுதலைக் கழகத்துக்காக சென்னையில் அமைந்துள்ள தலைமையகத்தை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியத்தை கழகத் தோழர்கள் நன்றாக உணர்வார்கள். கடும் முயற்சி எடுத்து குத்தகைக்கு எடுத்து அந்தத் தலைமை அலுவலகத்தில் கடந்த எட்டு ஆண்டுகளாக இயங்கி வருகிறோம். திராவிடர் விடுதலைக் கழகத்துக்கு மட்டுமல்ல; எத்தனையோ சிறிய அமைப்புகள், இயக்கங்கள் தங்களுக்கான கலந்துரையாடல், சந்திப்புக் கூட்டங்கள் நடத்துவதற்கு ‘தாய் வீடாக’ நமது தலைமைக் கழகம் பயன்பட்டு வருகிறது.

நகரின் மய்யப் பகுதியில் உள்ள அந்த அலுவலகத்தை அதன் உரிமையாளர்கள் விற்பனை செய்ய முடிவெடுத்தபோது தலைமைக் கழகம் இல்லாமல் போய் விடுமே என்ற கவலையும் வருத்தமும் நமக்கு உருவானது. இதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். அதற்காக ஆதரவாளர்கள் நண்பர்களிடம் கட்டமைப்பு நிதி திரட்டும் முயற்சிகளில் இறங்கினோம். பலரும் ஆர்வத்துடன் உதவினார்கள். நட்புக்கரம் நீட்டினார்கள். ஆனாலும் அலுவலக கட்டிடத்தை வாங்குவதற்கான தொகையில் பாதியளவைக்கூட நம்மால் எட்ட முடியவில்லை.

வீட்டின் உரிமையாளர்கள் சீக்கிரம் பணத்தைக் கொடுத்து முடித்துக் கொள்ளுங்கள் என்று தொடர்ந்து அழுத்தம் தருகிறார்கள். தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன், இதில் மிகவும் கவலையும் பொறுப்பையும் ஏற்று இதே பணியாய் தோழர்களிடம் தொடர்ந்து வேண்டுகோள் வைத்து வருவதை நாம் ஒவ்வொருவரும் அறிவோம்.

இப்போது தலைமைக் கழகத்தை நாம் தக்க வைத்துக் கொள்வதா? அல்லது விட்டு விடலாமா என்ற இறுதிக் கட்டத்தில் வந்து நிற்கிறோம்.

கழகத் தலைவர், கழகப் பொதுச் செயலாளர், கழக அமைப்புச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்கள் பலரும் தங்களால் முடிந்த அளவுக்கு நன்கொடை திரட்ட தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும் இனியும் இந்தத் திட்டத்தை தாமதப்படுத்த முடியாத நிலைக்கு வந்து சேர்ந்து விட்டோம்.

கடந்த மார்ச் 20, 2018இல் திருப்பூரில் கூடிய தலைமைக் குழுவில் இது குறித்து நீண்ட நேரம் விவாதித்தோம். இறுதியாக இந்த ‘தலைமைக் கழக’த்தை நாம் தக்க வைத்துக் கொள்வதில் கழகப் பொறுப்பாளர்கள் தோழர்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பையும் உறுதி செய்ய வேண்டும் என்ற தவிர்க்கவியலாத முடிவுக்கு வந்தோம்.

அந்த நோக்கத்தோடு கழகத்தின் பொறுப்பாளர்கள், தோழர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

பட்டியலில் தேர்வு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு தோழரும் ரூ.20,000 குறைந்த அளவு நன்கொடையைத் தாமாகவோ அல்லது திரட்டியோ தர வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட இந்தத் தொகை மிக மிகக் கட்டாயமானது என்றும் கழக தலைமைக் குழு முடிவெடுத்தது. அதற்கு கூடுதலாக நன்கொடை திரட்டித் தந்தால் மிகவும் மகிழ்வுடன் வரவேற்போம்.

பெரியார் இலட்சியத்துக்காக திராவிடர் விடுதலைக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டு செயல்படும் நமது தோழர்கள் ஒவ்வொருவருமே பொது வாழ்க்கையில் நேர்மையோடும் அர்ப்பணிப்போடும் கொள்கை சமரசமின்றி செயல்பட்டு வருவதை அந்தந்தப் பகுதி மக்களும் நண்பர்களும் தோழமை சக்திகளும் மிக நன்றாகவே அறிவார்கள். கழகத்தின் மீதும் கழகத் தோழர்கள் மீதும் உள்ள மரியாதையையும் நம்பிக்கையையும் நமது தோழர்கள் நல்ல வகையில் இந்தக் கட்டமைப்பு நிதி திரட்டலுக்குப் பயன்படுத்த முன் வருவார்கள் என்று நம்புகிறோம்.

மிகக் குறைந்தபட்ச அளவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த ரூ.20,000/-க்கான இலக்கை நிச்சயமாக ஒவ்வொரு தோழர்களாலும் செய்து முடிக்க முடியும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். இந்த இலக்கை எட்ட முடியாமைக்குக் காரணங்களை அடுக்கிக் காட்ட வேண்டாம் என்றும் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம். தோழர்கள் கழகத்துக்காக செலுத்தும் உண்மையான பங்களிப்பை மதிப்பிடும் ஒரு அளவுகோலாகவே இதனைத் தலைமைக் கழகம் கருத்தில் கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

‘கழகக் கட்டமைப்பின் அடிக்கற்கள்’ என்ற பெருமையில் ஒவ்வொரு கழகத் தோழரும் பங்கேற்க முன் வரவேண்டும். முன் வருவீர்கள் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு உண்டு!

இந்த நிதி திரட்டலுக்கான கெடு மே 15, 2019 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் மேலும் எக்காரணம் கொண்டும் கால நீட்டிப்புத் தர இயலாத நெருக்கடிக்கு நாம் உள்ளாகியுள்ளோம்.

கட்டமைப்பு திரட்டல் பணி முடிந்த அடுத்த வாரமே கழகத்தின் செயலவைக் கூடி நிதி திரட்டிய அனைத்துத் தோழர்களையும் பாராட்டிச் சிறப்பிக்கவும் முடிவு செய்துள்ளோம்.

தலைமைக் கழகத்தைத் தக்க வைக்கும் இந்த அடிப்படைக் கடமையை நிறைவேற்றி முடிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.

தோழமையுடன்,

கொளத்தூர் மணி
தலைவர்

விடுதலை இராசேந்திரன்
பொதுச் செயலாளர்

**குறிப்பு :** பட்டியலில் இடம் பெற்றுள்ள தோழர்கள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக கடிதங்கள் விரைவில் வந்து சேரும்.

## பொள்ளாச்சி பாலுறவு வன்முறை: மேட்டூரில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்

மேட்டூர் அனை சதுரங்காடி பெரியார் திடலில் 16.3.2019 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பொள்ளாச்சி பாலியல் சம்பவத்தைக் கண்டித்து மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் அனைத்துக் கட்சி, முற்போக்கு இயக்கங்கள், மகளிர் அமைப்புகளை ஒருங்கிணைத்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கி.கோவிந்தராசு தலைமை தாங்கினார்.

ஈழவளவன் (நாம் தமிழர்), அப்துல் கபூர் (விடுதலைச் சிறுத்தைகள் கட்சி), கே. நடராஜன் (அய்.என்.டி.யு.சி.), செ.மோகன்ராஜ் (தமிழக வாழ்வுரிமைக் கட்சி), வசந்தி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி), என்.பி. இராஜா (தி.மு.க.), மா. சிவக்குமார் (விடுதலைச் சிறுத்தைகள்), ஏ.எஸ்.வெங்கடேஸ்வரன் (மேட்டூர் காங்கிரஸ் கட்சி), அ.சக்திவேல் (திராவிடர் விடுதலைக் கழகம்) ஆகியோர் கண்டன உரையாற்றினர். கழகத் தோழர் ம.குமரேசன், கண்டன முழக்கமிட்டு நன்றியுரையாற்றினார்.

கூட்டத்தில் காவை.ஈசுவரன் (கொளத்தூர் ஒன்றிய செயலாளர்), மேட்டூர் நகர செயலாளர் ஆ.சுரேசு குமார், மாவட்ட பொருளாளர்சு.சம்பத்குமார் மற்றும் மேட்டூர், கொளத்தூர், நங்கவள்ளி, காவலாண்டியூர், ஆர்.எஸ். பகுதி தோழர்கள் மகளிரணி தோழர்கள் உள்பட அனைத்துக் கட்சி சார்பில் ஒன்றிய, நகர, மாவட்டப் பொறுப்பாளர்கள், பொது மக்கள், வியாபாரிகள் உள்பட ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

## பழங்குடி மக்களைப் பாதுகாக்க களமிறங்கினர் கள்ளக்குறிச்சி கழகத் தோழர்கள்

பழங்குடியினர் - மலைவாழ் மக்களை அந்த மக்கள் வாழக்கூடிய பகுதியில் இருந்து வெளியேற வேண்டும் என்று கடந்த மாதம் உச்சநீதி மன்றம் தீர்ப்பு கூறியுள்ளது.

வேறெங்கும் வீடு கட்டப்படுவதற்கான இடமோ அல்லது நிலமோ இல்லாத நிலையில் பன்னெடுங் காலமாக பழங்குடியினர் - மலைவாழ் மக்கள் வசித்துவந்த பகுதியில் இருந்து வெளியேற்ற வற்புறுத்தல் செய்தால் அந்த மக்கள் சொந்த மண்ணிலே அகதிகளாக இருக்க வேண்டிய ஒரு அவல நிலை ஏற்படும்.எனவே பழங்குடி-மலைவாழ் மக்களை அவர்கள் வசிக்கின்ற பகுதியில் இருந்து வெளியேற வேண்டும் என்று கூறியுள்ள உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பை திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கையையும், பழங்குடியினர்- மலைவாழ் மக்களுக்கு சாதி இருப்பிட சான்றிதழ்களை அரசு விரைவாக வழங்க வேண்டும் என்கிற கோரிக்கையை வலியுறுத்தி கல்லக்குறிச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக மாவட்டம் முழுவதும் 200-சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

பழங்குடியினர்- மலைவாழ் மக்கள் வாசிக்கக் கூடிய சில பகுதிகளில் தோழர்கள் நேரில் சந்தித்துப் பேசினர். சுவரொட்டிகள் ஒட்டியதை நேரில் பார்த்த அந்த மக்கள் திராவிடர் விடுதலைக் கழக தோழர்களை பார்த்து எங்கிருந்தோ வந்து யாரென்றே தெரியாத எங்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்றப் பெரியார் இயக்கத் தோழர்களே நன்றி என்று கூறி வாழ்த்திவிட்டு மேலும் தோழர்களிடம் அவர்களின் பல்வேறு சிக்கல்கள் குறித்து விளக்கி கூறினார்கள்.

குறிப்பாக பழங்குடியினர்- மலைவாழ் மக்களுக்கு சாதி இருப்பிட சான்றிதழ் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதோடு சிலருக்கு சாதி இருப்பிட சான்றிதழ் வழங்காமல் ஏமாற்றப்பட்டு திறமையான மாணவர்கள் மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு பெறமுடியாமல் தங்களது உரிமைகளை இழந்துள்ள சூழல் குறித்து வருத்தத்தோடு பேசினார்கள்.

பழங்குடியினர் - மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதியில் இருந்து வெளியேற வேண்டும் என்று உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை திரும்பப் பெறுவதோடு அவர்களின் கல்வி மேற்படிப்பு தொடர மற்றும் வேலை வாய்ப்பு பெறுவதற்கு சாதி இருப்பிட சான்றிதழ்களை அரசு விரைவாக வழங்க வேண்டுமென்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக வலியுறுத்துகின்றோம்.

## ‘நிமிர்வோம்’ தேர்தல் சிறப்பிதழ்: தோழர்களுக்கு வேண்டுகோள்!

‘நிமிர்வோம்’ ஏப்ரல் இதழ் தேர்தல் சிறப்பிதழாக – பா.ஜ.க., அ.இ.அ.தி.மு.க. கூட்டணியின் மக்கள் விரோதக் கொள்கைகளை விளக்கி ஏராளமான செய்திகள், கட்டுரைகள் இடம் பெறுகின்றன. கூடுதல் இதழ் தேவைப்படுவோர் மார்ச் 30 தேதிக்குள் தலைமைக் கழகத்துக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு :
7299230363 / 9841489896

# கூட்டணிகளின் கடந்தகால வரலாறுகளைப் பேசுவது காதில் பூ சுற்றும் வேலை!

- 5 ஆண்டுகால மோடி ஆட்சிக்கு பூஜ்யத்துக்கும் குறைவான மதிப்பெண்தான் போடுவேன் என்றார், 'பெரிய அய்யா' மருத்துவர் இராமதாஸ். இப்போது மீண்டும் மோடி பிரதமராக வந்தால்தான் நாட்டைக் காப்பாற்ற முடியும் என்கிறார்.
- எடப்பாடி ஆட்சியும் ஜெயலலிதா ஆட்சியும் ஊழலில் திளைத்த ஆட்சி என்று கூறி ஊழல் பட்டியல் தயாரித்து, ஆளுநரிடம் கொடுத்தது 'பெரிய அய்யா'வின் பா.ம.க. கட்சி. இப்போது குரலை மாற்றிக் கொண்டு 5 ஆண்டுகாலமாக நல்லாட்சி தந்து வருகிறது அ.இ.அ.தி.மு.க. என்கிறார்.
- 'இதய தெய்வம்' என்று 'மூச்சுக்கு மூச்சு' ஜெயலலிதாவின் 'நாமத்தை' உச்சரிக்கும் 'அம்மாவின் விசுவாசிகள்' ஜெயலலிதா என்ற ஊழல் குற்றவாளிக்கு நினைவு மண்டபம் கட்டக்கூடாது என்று வழக்குத் தொடுத்த பா.ம.க.வுடன் கைகோர்த்துக் கொண்டு ஓட்டுக் கேட்கிறார்கள். 'இதய தெய்வம்' இனி திரும்பி வந்து கேட்காது என்பது நன்றாகத் தெரியும்.
- காங்கிரஸ் ஆட்சிக்கு வர வேண்டுமா? அல்லது மோடியே பிரதமராக தொடர வேண்டுமா? என்பதைத் தனக்கு தரப்படும் தொகுதிகளை வைத்து தான் முடிவு செய்வேன் என்று 'சந்தர்ப்பவாத நாடகம்' நடத்தியது. தே.மு.தி.க., அதன் பிரச்சார பீரங்கிகள் மக்களை மடையர்களாக நினைத்துக் கொண்டு பா.ஜ.க.வுக்கும் அ.இ.அ.தி.மு.க.வுக்கும் ஓட்டு கேட்கிறார்கள்.

இதைச் சுட்டிக் காட்டினால், ஈழத் தமிழர்களுக்கு துரோகம் செய்த காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. கூட்டணி வைக்கவில்லையா? அவசர நிலை காலத்தில் காங்கிரசை எதிர்த்த தி.மு.க. இப்போது கூட்டணி வைக்கவில்லையா என்று எதிர்வாதம் செய்கிறார்கள்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் துரோகம் செய்தது உண்மை. அந்த துரோகம் செய்த அய்க்கிய முற்போக்குக் கூட்டணி அமைச்சரவையில் பா.ம.க.வின் 'சின்னஅய்யா' அன்புமணி, கடைசி வரை அமைச்சராக ஒட்டிக் கொண்டிருந்ததும் உண்மை; துரோகத்துக்கு தி.மு.க. துணை நின்றதும் உண்மை. இதையெல்லாம் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் முன் வைத்து பா.ஜ.க., காங்கிரஸ் என்ற இரண்டு தேசிய கட்சிகளையும் புறக்கணித்து தனித்து தேர்தல் களம் கண்டார் ஜெயலலிதா! 37 நாடாளுமன்ற தொகுதிகளில் அவரது கட்சி வெற்றி பெற்றது. மக்கள் தங்கள் தீர்ப்பை இந்த துரோகங்களுக்கு வழங்கி முடித்து விட்டார்கள்.

இப்போது 5 ஆண்டுகால மோடியின் ஆட்சிக்கு மக்களிடம் தீர்ப்பு கேட்கவே இந்தத் தேர்தல். ஜெயலலிதாவும் அவரைத் தொடர்ந்து அதிகாரத்துக்கு வந்த 'சரணாகதி' எடப்பாடி ஆட்சியின் செயல்பாடு களுக்கு மக்கள் தீர்ப்பைக் கேட்பதுதான் இந்த தேர்தல் களம்!

இந்த அடிப்படை உண்மைகளை புறந்தள்ளி விட்டு 1947இல் சுதந்திரம் கிடைத்தபோது காங்கிரஸ் தந்த வாக்குறுதியைக் காப்பாற்றியதா? 96இல் யாருடன் கூட்டணி? 88இல் எவருடன் கூட்டணி? அது சந்தர்ப்பவாதமல்லவா என்றெல்லாம் பேசுவது மக்கள் காதில் பூ சுற்றும் வேலை.

10 ஆண்டுகளுக்கு முன்பு நெஞ்சுவலி வந்தபோது அதற்கான சிகிச்சை தேவைப்பட்டது. பிறகு வயிற்று வலி வந்தபோது அதற்கான சிகிச்சையைத் தானே செய்ய வேண்டும்?

அன்றைக்கு நெஞ்சுவலிக்கு சிகிச்சை என்று 'கார்டியாலஜி' மருத்துவரை சந்திக்க ஓடி, அவரது ஆலோசனைப்படி சிகிச்சை எடுத்தவர்கள் இன்று வயிற்றுவலி டாக்டரைப் பார்த்து, அவரது ஆலோசனை கேட்கலாமோ? நெஞ்சு வலிக்குப் பார்த்த அதே டாக்டரை வயிற்றுவலிக்குப் பார்க்காதது, சந்தர்ப்ப வாதமல்லவா? என்று கேட்பது சுத்த அபத்தம்!

இப்படித்தான் இப்போது பா.ஜ.க., அ.இ.அ.தி.மு.க.வுக்காக வாதாடி வரும் 'அறிவுக் கொழுந்துகளும்' கேள்விகளைக் கேட்கின்றன.

மக்கள், எந்தக் கருத்தில் நியாயம் இருக்கிறது என்பதை நடைமுறையோடு பொருத்தி எடை போடத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இவர்கள் புரிந்து கொள்ளட்டும்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

களையும் விமர்சிக்கும் மாற்றம் உருவாகியுள்ளதையும் எடுத்துரைத்தார்.

தொடர்ச்சியாக இந்த தேர்தலில் தமிழர் நலனுக்கெதிராய் உள்ள பாஜக மற்றும் அதிமுக கூட்டணி வீழ்த்தப்படவேண்டிய காரணங்களை விளக்கினார். கழகத்தின் தலைமைக்குழு தீர்மானங்களை விளக்கி யாரை ஆதரிக்க வேண்டும் என்பதைவிட யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்ற பெரியாரிய தத்துவத்தை கடைப் பிடித்து திமுக கூட்டணி வெற்றி பெற வேண்டிய அவசியத்தை விளக்கினார். நிகழ்ச்சி நடந்த 23.03.2019 அன்று பகத்சிங், சுகதேவ், இராஜகுரு ஆகியோர் நினைவு நாளாகும். அவர்களின் தியாகங்களை எடுத்துக் கூறி அவர்களை ஏற்றுக் கொண்டுள்ள சி.பி.எம். கட்சியை கோவையில் வெற்றி பெறச் செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

இறுதியாக வெங்கட் நன்றியுரை கூற நிகழ்ச்சி முடிவடைந்தது. நிகழ்வில் கோவை, திருப்பூர், பொள்ளாச்சி, ஆனைமலை தோழர்கள் கலந்துகொண்டனர்.

# தமிழர்களின் இரயில்வே வேலை வாய்ப்புகளைப் பறிக்கும் வடநாட்டுக் கும்பல்

தமிழ்நாட்டு வேலை வாய்ப்புகளில் வடநாட்டார் குவிக்கப்பட்டு வரும் 'உரிமைப் பறிப்பு' கொடுமைகள் குறித்து கடந்த வாரம் 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் எழுதியிருந்தோம்.

அதைத் தொடர்ந்து மற்றொரு அதிர்ச்சித் தகவலும் வெளி வந்திருக்கிறது.

தெற்கு இரயில்வே சென்னை தேர்வு வாரியத்தில் 'குரூப் டி' பணியாளர்களுக்கு 1550 பணியிடங்களுக்கான தேர்வு நடைபெற்று முடிந்திருக்கிறது. இதற்கான கல்வித் தகுதி 10ஆம் வகுப்புத் தேர்ச்சி. நாடு முழுதும் ஒரு கோடியே 7 இலட்சம் பேர் விண்ணப்பித்தார்கள். தேர்வு முடிவுகள் கடந்த மார்ச் 4ஆம் தேதி வெளியிடப்பட்டன. இதில் சென்னை தேர்வு வாரியத்தில் 1550 தேர்ச்சி பெற்றவர்களில் 90 சதவீதம் பேர் வடநாட்டினர்.

தேர்வுக்கான விதிகள் இருக்கின்றன. விதி எண். 11இன்படி இந்தக் கீழ்நிலைப் பதவிகளுக்கு தொடர்புடைய மாநிலங்களைச் சார்ந்தவர்களையே தேர்வு செய்ய வேண்டும். மாநில மொழியிலும் இந்தி, ஆங்கில மொழியிலும் இந்தத் தேர்வுக்கான விளம்பரத்தை செய்ய வேண்டும். இந்த விளம்பரங்களை மண்டலங்களில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்கள் வழியாகவே செய்ய வேண்டும்.

இந்த விதிகள் எதையுமே இரயில்வே நிர்வாகம் பின்பற்றவில்லை.

இந்தியா முழுமைக்கும் சேர்த்து பொதுவான விளம்பரம் மட்டுமே செய்யப்பட்டது. - இது முதல் தவறு.

கணினி பற்றாக்குறையைக் காரணம் காட்டி பல கட்டங்களாகத் தேர்வுகளை நடத்தியது. இதனால் ஒரே நபர் பல இடங்களில் தேர்வு எழுதினார்கள். அதைக் கண்காணிக்க முடியவில்லை. - இது இரண்டாவது தவறு.

தவறான விடைகளுக்கு மதிப்பெண் குறைப்பு என்ற கொடூரமான விதிமுறையையும் இதில் புகுத்தினார்கள். 10ஆம் வகுப்புப் படித்துவிட்டு வேலை வாய்ப்புக்காக வரும் இளைஞர்களுக்கு இப்படிப்பட்ட முறைகளைப் புகுத்துவது மாபெரும் அநீதி!

விடைகளுக்கு மதிப்பெண்கள் - எந்த அடிப்படையில் வழங்கப்படும் என்பதை திட்டமிட்டே தேர்வு வாரியம் தெரிவிக்கவில்லை. இதனால் 100க்கு 350 மதிப்பெண்களைக்கூட வடநாட்டுக்காரர்கள் பெற முடிந்திருக்கிறது. பீகார் மாநிலத்தில் பல இலட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டு நடத்தும் பயிற்சி மய்யங்களைச் சார்ந்தவர்கள் குறுக்கு வழிகளில் இப்படி வேலைகளைத் தட்டிப் பறித்துக் கெண்டு விட்டார்கள். பாட்னாவிலும் இராஜஸ்தானிலும் நடத்தப்படும் பயிற்சி மய்யங்கள், தேர்வு நடத்தும் அமைப்புகளோடு கள்ளத் தொடர்பு வைத்துக் கொண்டு முறைகேடாக வடநாட்டுக்காரர்களை தமிழ்நாட்டுக்குள் நுழைத்து விடுகின்றன.

தமிழே தெரியாத ஒரு இராஜஸ்தான் பேர்வழி அஞ்சல்துறைக்கான தேர்வில் தமிழில் கூடுதல் மதிப்பெண்கள் பெற்று தமிழ்நாட்டில் வேலையில் நுழைந்த அவலமும் ஏற்கெனவே அம்பலமானது.

தமிழ்நாட்டின் வேலை வாய்ப்புகளை வடநாட்டானுக்குத் தாரை வார்த்த கும்பல் மீண்டும் தமிழ்நாட்டை சூறையாட தேர்தலில் ஓட்டு கேட்டு வருகிறது.

தமிழர்களே எச்சரிக்கை!

## ஃபாரூக் துணைவியார் குடும்பத்தினருக்கு கழகத் தலைவரின் அன்பு வேண்டுகோள்



கோவையில் அண்ணாமலை அரங்கில் மத அடிப்படைவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட பாரூக்கின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம் சனிக்கிழமை 23.03.2019 மாலை 5 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் அரியலூர் மாவட்டம் கவரபாளையம் சரோஜா-இராமகிருஷ்ணன் ஆகியோரின் மகன் இராவண கோபால் – ஈரோடு மாவட்டம் பவானிசாகர் இலட்சுமி-நாச்சிமுத்து ஆகியோரின் மகள் கோமதி வாழ்க்கை இணையேற்பு விழா கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். திருமணத்தை தலைமையேற்று நடத்திய கழகத் தலைவர் இந்தத் திருமணத்தில் ஒருவர் கணவனை இழந்தவர், ஒருவர் மனைவியைப் பிரிந்தவர். வாழ்க்கை இணையேற்கும் இரண்டு திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம் என்று பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார். மேலும் கோமதியின் மகன், தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் பிரபாகரன்தான் இந்த மறுமணத்திற்கு முன் முயற்சியை தொடங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் நடைபெறும் இத்திருமணத்திற்கு வந்துள்ள ஹமீது (ஃபாரூக் தந்தை), இப்ராஹீம் (ரஷீதா தந்தை), ஷாஜகான் (ரஷீதா சகோதரர்) ஆகியோர் இந்தத் திருமணத்தை எண்ணிப் பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அரங்கமே கரவொலி எழுப்பி வரவேற்றது. ஃபாரூக் இணையர் ரஷீதா தனது இரு குழந்தைகளுடன் நிகழ்விற்கு வந்திருந்தார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஏழு தமிழர் விடுதலையும் பார்ப்பன சுப்ரமணியசாமி திமிரும்

‘ஏழு தமிழர்களை விடுதலை செய்ய மாட்டோம்’ என்று கொக்கரித்திருக்கிறார், பார்ப்பனர் சுப்ரமணியசாமி. சென்னை விமான நிலையத்தில் அவர் அளித்த பேட்டியில் 161ஆவது சட்டப் பிரிவின் கீழ் தமிழக அமைச்சரவை எடுத்துள்ள முடிவுக்கு ஆளுநர் ஒப்புதல் தர வேண்டாமா என்ற கேள்விக்கு, அமைச்சரவை முடிவைத் தூக்கிக் குப்பையில் போடு என்று திமிருடன் பதில் கூறியிருக்கிறார்.



சுப்ரமணியசாமி 7 தமிழர் விடுதலையில் முடிவெடுக்கும் அதிகாரம் படைத்தவரா? உச்சநீதிமன்றம், அமைச்சரவை முடிவுகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டவரா? அப்படி ஒரு அதிகாரம் அவருக்கு எப்படி கிடைத்தது? ‘மனுதர்மம்’ வழங்கியுள்ள பார்ப்பன அதிகாரத் திமிரா?

28 ஆண்டுகளாக ஏழு தமிழர்களும் சிறையில் வாடுகிறார்கள். சிறைவாசிகளின் தண்டனைக் குறைப்புக்கு சட்டம் வழங்கியுள்ள உரிமைகள்கூட, இவர்களுக்குக் கிடையாதாம். அதே நேரத்தில் குண்டு வைத்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்த ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகள் ஒவ்வொரு வழக்கிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர். சிறப்பு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்படும் இந்த காவி பயங்கரவாதிகள் விடுதலையை எதிர்த்து பா.ஜ.க.வின் மோடி ஆட்சி, மேல்முறையீட்டுக்குக்கூட செல்லவில்லை.

- 2007ஆம் ஆண்டு பிப். 18ஆம் தேதி இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் நோக்கிச் சென்ற சம்ஜவுத்தா விரைவு இரயில், அரியானாவில் உள்ள திவானா கிராமம் வழியாக ஓடிக் கொண்டிருந்த போது ஒரு பெட்டியில் பயங்கர குண்டு வெடித்தது. இதில் பயணித்த 68 அப்பாவி பயணிகள் கொல்லப்பட்டனர். இதில் 48 பேர் பாகிஸ் தானியர்கள். முன்னாள் ஆர்.எஸ்.எஸ். தலைவரான அசீமானந்தா, லாக்கேஷ் சர்மா, கமல் சவுகான், ராஜிந்தர் சவுத்ரி என்ற நான்கு காவி பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். மத்திய அரசின் கட்டுப்பாட் டிலுள்ள தேசியப் புலனாய்வு நிறுவனம் (என்.அய்.ஏ.), இந்த வழக்கை விசாரித்தது. சிறையில் விசாரணைக் கைதியாக இருந்த போதே அசீமானந்தா, தனது செயலுக்காக மனம் வருந்தி, இந்த குண்டு வெடிப்பை நடத்தியது தாங்கள் தான் என்றும், எப்படி அதை நடத்தினோம் என்றும் விரிவாக ‘கேரவான்’ இதழுக்கு பேட்டி அளித்திருந்தார். குண்டுவெடிப்பு நடந்த தொடர்வண்டிப் பெட்டிக்கு அருகே உள்ள பெட்டியில் வெடிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டுகளும் கைப்பற்றப்பட்டன. வழக்கிற்கு இவை முக்கிய சாட்சித் தடயம். ஆனால் இந்த சாட்சித் தடயத்தை சிறப்பு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காமல் தேசிய புலனாய்வு மய்யம் மறைத்தது. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக நேரடி சாட்சியமளித்தவர்கள் 250 பேர். இதில் பலர் பிறகு பிறழ்சாட்சிகளாக மாறினர்.

அனைவரையும் விடுதலை செய்த அரியானா சிறப்பு நீதிமன்றம், அரசுத் தரப்பு குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறிவிட்டது என்று கூறியிருக்கிறது. புலன் விசாரணையில் ஈடுபட்ட ஓய்வு பெற்ற ஹரியானா காவல்துறை அதிகாரி வழக்கில் அரும்பாடுபட்டு தாங்கள் சேகரித்த தடயங்களை நீதிமன்றத்தில் திட்டமிட்டு புலனாய்வுத் துறை சமர்ப்பிக்கவில்லை என்று பகிரங்கமாகக் குற்றம்சாட்டியுள்ளார். குண்டு வெடிப்புக்கு பலியான பாகிஸ்தானியரின் மகளான ரகிலா வாக்கீல் என்ற பெண், தன்னை ஒரு சாட்சியாக இந்த வழக்கில் விசாரிக்க வேண்டும் என்று தனது வழக்கறிஞர் மூலம் சமர்ப்பித்த மனுவை காரணம் ஏதும் கூறாமலேயே சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.

- 2007ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதி அசீமானந்தா தலைமையிலான இதே நால்வர் குழு தான் மெக்கா மஸ்ஜீத், அஜ்மீர்தர்கா ஆகிய இஸ்லாமிய வழிபாட்டு இடங்களில் குண்டு வைத்தது என்று தேசியப் புலனாய்வுக் குழு குற்றம்சாட்டி கைது செய்து வழக்குத் தொடர்ந்தது. மெக்கா மஜ்ஜித் குண்டுவெடிப்பில் 9 பேர் கொல்லப்பட்டனர். அஜ்மிர்தர்கா குண்டு வெடிப்பில் 3 பேர் கொல்லப்பட்டனர். இந்த வழக்குகளிலிருந்தும் இந்த நான்கு காவி பயங்கரவாதிகளும் சிறப்பு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

2017, 2018ஆம் ஆண்டுகளில் இந்த வழக்கின் தீர்ப்பு வந்தது. ஆனால் மோடி ஆட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய புலனாய்வுத் துறை வழக்கை மேல்முறையீடு செய்யவே இல்லை. இப்போது ‘சம்ஜவுத்தா’ குண்டுவெடிப்பு கடைசி வழக்கிலிருந்தும் விடுதலை பெற்று விட்டார்கள். இந்த வழக்கிலும் மேல் முறையீடு செய்யப் போவதாக புலனாய்வுத் துறை உறுதியாகக் கூறவில்லை. பரிசீலிப்போம் என்று கூறுகிறது.

வழக்கை முறையாக நடத்தவில்லை என்று பாகிஸ்தான் தூதரக அதிகாரி இந்திய தூதரக அதிகாரியை அழைத்து எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்.

குண்டு வெடிப்பில் பலியான அப்பாவி மக்கள் பாகிஸ்தானியர் மட்டுமல்ல; இந்தியர்களும் உண்டு.

சுமார் 80 அப்பாவி பொது மக்களை குண்டு வைத்து கொலை செய்த இந்து பயங்கரவாதிகளைக் காப்பாற்றிய நடுவண் பா.ஜ.க. ஆட்சி, 28 ஆண்டு சிறைவாசத்துக்குப் பிறகு, உச்சநீதிமன்றம் தண்டனைக் குறைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் என்று அறிவுறுத்திய பிறகும் தமிழக அமைச்சரவை அதற்கு ஒப்புதலை தந்தப் பிறகும் இராஜிவ் கொலை வழக்கில் நேரடி தொடர்பே இல்லாத இந்த 7 தமிழர்களை விடுதலை செய்ய மறுக்கிறது, தமிழக ஆளுநர் மேலிட உத்தரவையேற்று, கோப்பைக் கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார்.

சுப்ரமணியசாமி, பார்ப்பனத் திமிருடன் தமிழக அமைச்சரவை தீர்மானத்தைக் குப்பையில் போடு என்கிறார்.

“பார்ப்பான் என்றால் தண்டனை வழங்காதே; சூத்திரன் என்றால் தலையை வெட்டு” என்ற மனுதர்மச் சட்டத்தைத்தான் இப்போதும் பா.ஜ.க. ஆட்சி நடைமுறைப்படுத்துகிறதா? இது நேர்மையா? நியாயமா? ●


## தற்போது விற்பனையில்

**‘நிமிர்வோம்’ – மார்ச் 2019 இதழ்**

- தலையங்கம் - அவமதிப்புகளைப் புறந்தள்ளிய “தொண்டறம்”
- ஓட்டுக்கு நோட்டு - பெரியார் சொன்ன கதை
- நஞ்சு கக்கும் நாகசாமிக்கு செம் மொழி ஆய்வுக் குழுவில் பதவியா?
- பா.ஜ.க ஆட்சிகளில் ஊழல் பட்டியல்
- அன்னை மணியம்மையார் வாழ்க்கைப் பாதை
- விடுதலை புலிகள் ஏற்றுக் கொண்ட திராவிடர் மரபு - “கருஞ் சட்டைக் கலைஞர்” நூல் ஆய்வு
- ஆரிய இராமனை “கற்புக் கரசனாக்கிய” கம்பர் - அண்ணா நேருக்குநேர் நடத்திய சொற்போர்




மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745/7299230363

www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com



## மணமகன் தேவை

40 வயதான தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றும் ‘எம்.சி.ஏ.’ பட்டதாரியான வாசுமதி எனும் பெண்ணுக்கு மணமகன் தேவை. விவாகரத்துப் பெற்றவர். ஜாதி, மதம் தடையில்லை. தொடர்புக்கு : 94874 85266


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 29th March 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN